# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1944/2 - 2015 දෙසැම්බර් මස 07 වැනි සඳුදා - 2015.12.07

*1944/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (X)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பிவி 94125 பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதும் முறையே நிரல் II இன் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள சுருக்கெழுத்துக்கள் மூலம் குறித்துரைக்கப்பட்டவையுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற, உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக நாகானந்த இன்டநஷனல் இன்ஸ்டிடியூட் வோர் புடிஸ்ட் ஸ்டடீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

**அட்டவணை**

| நிரல் I<br>பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | நிரல் II<br>பட்டங்களுக்கான சுருக்கங்கள் |
|---|---|
| பௌத்த கற்கைகளில் கலை இளமாணி | பீ ஏ (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் கலை இளமாணி (விசேடம்) | பீ ஏ (விசேடம்) பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் பட்டப்பின் திப்புளோமா | பி ஜி டிப் (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் கலை முதுமாணி | எம் ஏ (பௌத்த கற்கைகள்) |
| பௌத்த கற்கைகளில் தத்துவவியல் முதுமாணி | எம் பில் (பௌத்த கற்கைகள்) |

லக்ஸ்மன் கிரிஎல்ல,
உயர்கல்வி மற்றும்
நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2015, திசெம்பர் 04.*

*12 - 688*




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*